# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,

ந.க.எண்.எம்3/33830/2016 நாள் : 02.05.2017

பொருள் : நில உரிமை மாற்றம் - அகஸ்தீஸ்வரம் வட்டம் - அஞ்சுகிராமம் கிராமம் புல எண் 1140 ல் 2.02.24 ஹெக்டேர்ஸ் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்தல் - முன்நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடல் தொடர்பாக

படிக்கப்பட்டவை :
1. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருநெல்வேலி கடிதம் எண்.ந.க.எண்.அ2/295/2014, நாள் 26.08.2016.
2. இவ்வலுவலக கடிதம் எண் நக எம்3/33830/2016, நாள் 17.11.2016 மற்றும் 25.01.2017.
3. வருவாய் கோட்டாட்சியர், நாகர்கோவில் கடிதம் எண் நக ஆ4/5934/2016, நாள் 11.04.2017.
4. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் புலத்தணிக்கைக் குறிப்பு நாள் 22.04.2017.
5. அரசாணை எண் 976/வருவாய்த் துறை நாள் 20.10.1997
6. அரசாணை நிலை எண்.67/வருவாய் நி.மு 5(2)த்துறை, நாள் 04.02.2000
7. கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண் பி1/4290/2015, நாள் 13.02.2015.

-------------

ஆணை :

அகஸ்தீஸ்வரம் வட்டம், அஞ்சுகிராமம் கிராமம் புல எண் 1140 ல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நாகர்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் மக்களுக்கு மாற்று இடத்தில் வீடுகள் கட்டும் பொருட்டு 2.02.24 ஹெக்டேர்ஸ் நிலத்தினை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து தரக்கோரி நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், திருநேல்வேலி அவர்கள் பார்வை 1ல் கண்ட கடிதத்தின் வாயிலாக அரசாணை நிலை எண் 24(ஆ) ன்படி குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பித்தது தொடர்பாக இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கையினை கோரியதில் பார்வை 3ல் கண்ட கடிதத்தின் வாயிலாக நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அகஸ்தீஸ்வரம் வட்டம், அஞ்சுகிராமம் கிராமம் புல எண் 1140 ன் மொத்த பரப்பு 13.35.50 ஹெக்டேர்ஸ் எனவும், மேற்படி புலமானது கிராம ஆவணங்களின்படி உப்பளம் புறம்போக்கு என வகைபாடு கொண்டதென்றும், மேற்படி நிலத்திலிருந்து பல துறைகளுக்கு நிலங்கள் உட்பிரிவு செய்து வழங்கப்பட்டுள்ளது போக மேற்படி புலத்தில் கிழக்கு பக்கமாக அமைந்துள்ள ஓடையானது 0.46.00 ஹெக்டேர்ஸ் உள்ளதென்றும் தற்போது புல எண்.1140/1ல்

18/2/2020
EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

மீதமுள்ள 2.02.34 ஹெக்டேர்ஸ் நிலத்தில் குடிசை மாற்று வாரியத்திற்கு 1.52.34 ஹெக்டர்ஸ் நிலத்தினை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் மேற்படி புலத்திற்கு புல எண் 1140/11 என கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி புலமானது தரிசாக உள்ளது என்றும், இந்நிலத்தல் கோயில், மசூதி, சர்ச், விலை உயர்ந்த மரங்கள் மற்றும் புராதனச் சின்னங்கள் உயர் மற்றும் தாழ்வு மின் அழுத்த கம்பிகள் எதுவும் செல்லவில்லை என்றும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள புலமானது பிரஸ்தாப புலத்தின் தென்கிழக்கு பக்கமாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்து அகஸ்தீஸ்வரம் வட்டம், அஞ்சுகிராமம் கிராமம் புல எண் 1140/11 ல் 1.52.23 ஹெக்டேர்ஸ் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு குடியிருப்பு அமைப்பதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர் மேற்படி புலத்தினை தணிக்கை செய்து கீழ்க்கண்டவாறு அறிக்கை செய்துள்ளார்.

மேற்படி புலமானது கன்னியாகுமரி - அஞ்சுகிராமம் தேசிய நெடுஞ்சாலையில் கன்னியாகுமரியில் இருந்து சுமார் ஐந்து கிலோமீட்டருக்கு வடக்கில் சாலையின் வலதுபுறம் அமைந்துள்ளதாகவும், புல எண் 1140 கிராம ஆவணங்களின்படி உப்பள புறம்போக்கு என வகைபாடு கொண்ட நிலமென்றும், மேற்படி புலத்தின் மொத்த பரப்பு 13.35.50 ஹெக்டேர்ஸ் என்றும், மேற்படி புலத்தில் ஏற்கனவே பல துறைகளுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

| உட்பிரிவுக்கு முன் | | | உட்பிரிவுக்குப் பின் | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | மொத்த பரப்பு | வகைபாடு | புல எண் | மொத்த பரப்பு | வகைபாடு |
| 1140 | 13.35.00 | உப்பள புறம்போக்கு | 1140/1 | 1.60.44 | உப்பள புறம்போக்கு |
| | | | 1140/2 | 0.20.24 | பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை |
| | | | 1140/3 | 2.02.24 | உயர்கல்வித் துறை (கலை மற்றும் அறிவியல் கல்லூரி) |
| | | | 1140/4 | 0.20.25 | சிறுபான்மையினர் கல்லூரி விடுதி |
| | | | 1140/5 | 2.02.24 | உயர்கல்வித் துறை |
| | | | 1140/6 | 0.13.50 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் |
| | | | 1140/7 | 4.04.48 | காவலர் வீட்டுவசதி கழகம், சென்னை |
| | | | 1140/8 | 0.08.00 | நூலகத்துறை |
| | | | 1140/9 | 2.02.24 | பதிவாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம், திருநெல்வேலி |

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 1140/10 | 0.46.00 | ஓடை |
| | | | 1140/12 | 0.06.07 | கால்நடை மருந்தகம், கால்நடை பராமரிப்புத் துறை |
| | | | 1140/13 | 0.49.80 | கன்னியாகுமரி மாவட்ட மின்சார வாரியம் |
| | மொத்தம் | | | 13.35.50 | |

மேற்படி புல எண் 1140 உப்பளம் புறம்போக்கு நிலத்தில் பல துறைகளுக்கு உட்பிரிவு செய்யப்பட்ட நிலம் போக மீதமுள்ள பரப்பான 1.60.44 ஹெக்டேர்ஸ் நிலத்தில் குடியிருப்புகள் கட்டும் வகைக்கு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் பொருட்டு மேற்படி புலத்தினை கீழ்க்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

| உட்பிரிவுக்கு முன் | | | உட்பிரிவுக்குப் பின் | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | மொத்த பரப்பு | வகைபாடு | புல எண் | மொத்த பரப்பு | வகைபாடு |
| 1140/1 | 1.60.44 | உப்பள புறம்போக்கு | 1140/1 | 0.08.21 | உப்பளம் புறம்போக்கு |
| | | | 1140/11 | 1.52.23 | தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் |
| | மொத்தம் | | | 1.60.44 | |

மேற்படி புலத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு தேர்வு செய்யப்பட்ட புலமானது பிரஸ்தாப புலத்தின் தென் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளதாகவும், மேற்படி புலத்தின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் ஓடை அமைந்துள்ளது என்றும், பிரஸ்தாப புலத்திற்கு செல்ல பாதை வசதி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி புலத்தில் புராதன சின்னங்களோ, விலையுயர்ந்த மரங்களோ, கட்டிடங்களோ, உயர்அழுத்த தாழ்வழுத்த மின் கம்பங்களோ எதுவும் செல்லவில்லை எனவும், மேற்படி புலத்தினை நாகர்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் மக்களுக்கு மாற்று இடத்தில் வீடுகள் கட்டும் பொருட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் பொருட்டு பொது மக்களிடமிருந்து எந்தவிதமான ஆட்சேபனைகளும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்து தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நாகர்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் மக்களுக்கு மாற்று இடத்தில் வீடுகள் கட்டும் அவசரத்தினை கருத்தில் கொண்டு நிலமாற்றப் பிரேரணையினை பின்னுறுத்தி முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என மாவட்ட வருவாய் அலுவலர் தனது புலத்தணிக்கைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் புலத்தணிக்கைக் குறிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும், பார்வை 5ல் கண்ட அரசாணையின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையிலும் அகஸ்தீஸ்வரம் வட்டம் அஞ்சுகிராமம் கிராமம் 1140/1 ல்

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

உட்பிரிவுசெய்யப்பட்ட புல எண் 1140/11ல் அமைந்துள்ள மொத்த பரப்பான 1.52.23 ஹெக்டேர்ஸ் நிலத்தினை நாகர்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் மக்களுக்கு மாற்று இடத்தில் வீடுகள் கட்டும் அவசரத்தினை கருத்தில் கொண்டும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டுவதற்கு நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யலாம் என பார்வை 6ல் கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளபடியாலும், நில உரிமை மாற்றப் பிரேரணையினை பின்னுறுத்தி முன்நுழைவு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் பார்வை 7ல் கண்ட கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளபடி வட்ட மற்றும் கிராம அ பதிவேட்டில் குறிப்பு கலத்தில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்)சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல் / உத்தரவுப்படி /

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
மாவட்டாட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்),
நாகர்கோவில்.

பெறுனர்

நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
திருநெல்வேலி.

நகல் : வருவாய் கோட்டாட்சியர், நாகர்கோவில்.
நகல் : வட்டாட்சியர், அகஸ்தீஸ்வரம்
நகல் : எம்3 இருப்புக் கோப்புக்கு
உதிரி 2

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

(10)

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்**

**பிறப்பிப்பவர் :** திருமதி ஆ. மணிமேகலை, B.E.,

ந.க. எண் 5444/2019 திலிம3 நாள் 21.01.2020

**பொருள் :** கட்டிடம் - திருநெல்வேலி மண்டலம் - கன்னியாகுமரி மாவட்டம் - அகஸ்தீஸ்வரம் வட்டம் - அஞ்சுகிராமம் பேரூராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண் 1140/11-ல் 15223.00 சமீ பரப்பு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 15 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் 17837.40 சமீ பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி வழங்கிட இசைவு மற்றும் மனை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**படிக்க :**

1. செயல் அலுவலர், அஞ்சுகிராமம் பேரூராட்சி கடிதம் ந.க. எண் 66/2018, நாள் 22.03.2018 மற்றும் 07.11.2018
2. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கடிதம் ந.க. எண் 2002/உபொ(தி) /2017, நாள் 14.10.2019 மற்றும் 26.12.2019
3. Senior Planner, Tamil Nadu Slum Clearance Board, dated 16.10.2019
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019 நஊ2, நாள் 31.10.2019
5. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 18.10.2019 மற்றும் 21.11.2019
6. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019

------

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், அஞ்சுகிராமம் பேரூராட்சி மற்றும் கிராமம், சர்வே எண் 1140/11-ல் 15223.00 சமீ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு "ABCDEF" என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 15 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் 17837.40 சமீ பரப்பளவில் தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கொண்ட தொகுப்பு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்கிட இசைவும் அளிக்கப்படுகிறது. கட்டிட அனுமதி இசைவளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **க.வ/ம (திலி) எண் 4அ, 4ஆ/2020** என எண்ணிடப்பட்டுள்ளது.

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/ developer and also the architects/ Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. உத்தேச கட்டட மனையிடத்தில் பொதுமக்களுக்கு எளிதில் தெரியும் வகையில் பலகை அமைத்து ஒப்புதல் வரைபடத்தின் படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set Back) வாகன நிறுத்தம், நகர் ஊரமைப்பு துறை ஒப்புதல் எண் /நாள், உள்ளாட்சி கட்டட அனுமதி எண் /நாள் மற்றும் அனைத்து விபரங்களும் குறிப்பிட்டு பார்வைக்கு வைத்தல் வேண்டும்.
5. உத்தேச கட்டுமானத்தின் மொத்த மேற்கூரைப்பரப்பில் 1/3rd பரப்பிற்கு குறையாத அளவில் Solar Energy System அமைக்கப்படல் வேண்டும்.
6. இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு Open Space Reservation பகுதியினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும். (The proposals of Tamil Nadu Slum Clearance Board (TNSCB) are Government agencies bound to form the roads, parks and hand them over to the local body at the end of execution of project)
7. This order is passed subject to the outcome of the Madras High Court Madurai Bench writ petition W.P. (MD) No. 8948 of 2019

**நிபந்தனைகள் :**

1. உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Assisted Water Heating System அமைப்பு அமைக்கப்பட வேண்டும்.

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகன நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றம் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தில் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண் 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் தீயணைப்பு துறையின் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகாிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுாிக்கப்பட வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயாிங் செய்யப்பட வேண்டும்.

நன்னிலை வரித்தொகை ரூ.48,300/- (ரூபாய் நாற்பத்து எட்டாயிரத்து முன்னூறு மட்டும்) அரசு கணக்கில் 05.12.2019-ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின் படி காட்சி பலகை வைப்புத் தொகை (Display Board Deposit) ரூ.10,000/- 02.12.2019-ல் இவ்வலுவலக வங்கி கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அனுப்பிட உள்ளாட்சி நிர்வாக அதிகாரி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

மனுதாரர் உள்ளாட்சியை அணுகிடவும், செயல் அலுவலர், அஞ்சுகிராமம் பேரூராட்சி மேற்கொண்டு வரைபடத்துடன் உத்தரவினை மனுதாரருக்கு வழங்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
திருநெல்வேலி - 5.

**இணைப்பு**
இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

**பெறுநர்**
செயல் அலுவலர்
அஞ்சுகிராமம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

**நகல்**

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் திருநெல்வேலி - 7 } செயலாணை கடிதம் மட்டும்

2. தொழில் நுட்ப வைப்பறை - 1

18/2/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned with CamScanner

# அஞ்சுகிராமம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு/திருமதி. பா. சுந்தரேசன்

ந.க.எண்: 16/2020

கட்டிட உரிமம் எண்: ...3/2019–2020

நாள்:06-02-2020

பொருள்: கட்டிட உரிமம் அஞ்சுகிராமம் பேரூராட்சி – வார்டு எண்: WD-14, பால்குளம் – கட்டிட சர்வே எண் : 1140/11, மனை எண் : – –ல் குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: திரு/திருமதி :நிர்வாக பொறியாளர் , தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் , திருநெல்வேலி த/பெ,க/பெ :நிர்வாக பொறியாளர்,தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் எண் :115 நாள் :28–01–2020

ஆணை:

அஞ்சுகிராமம் பேரூராட்சிக்குட்பட்ட கட்டிட சர்வே எண் : 1140/11, மனை எண் : – – ல் , திரு/திருமதி :நிர்வாக பொறியாளர் , தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் , திருநெல்வேலி ., த/பெ,க/பெ :நிர்வாக பொறியாளர்,தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் என்பவர் அடிதளம் 48000.00 ச.மீ / ச.அ , தரைதளம் 48000.00 ச.மீ / ச.அ , முதல் தளம் 48000.00 ச.மீ / ச.அ , முதல் தளம் 48000.00 ச.மீ / ச.அ , தார்சு கட்டிடம் கட்டிக்கொள்ள பார்வையில் காணும் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார். வரைபடம் நகல் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பமும் விரிவாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி 06-02-2020 முதல் ஐந்து வருட காலத்திற்கு அதாவது 05-02-2025 வரை அமுலில் இருக்கும்.
2 இந்த அனுமதி பெற்ற கட்டிடம் , கட்டிடம் வேலை முடிந்த 15 தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்தி புதிய கட்டிடத்திற்கு வரி விதிப்பு செய்து கொள்ள வேண்டும்
3 அரசாங்க (புறம்போக்கு) நிலத்திலும் பொது சாலைகளிலும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது
4 கண்டிப்பாக மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட வேண்டும். முறையான வடிகால் வசதி அமைக்க வேண்டும்
5 அங்கிகாரம் செய்யப்பட்ட பிளானுக்கு எவ்வித மாறுதலும் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால், முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
6 கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல . கட்டிட அனுமதிக்கு செலுத்தப்பட்ட தொகையினை திரும்ப வழங்கப்பட மாட்டாது .
7 கட்டிட வேலைநடக்குமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ஒன்று வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர் செய்ய வேண்டும்.
8 க,சாக்கடை,தொட்டி முதலியன சுகாதார முறைப்படி தளம் போடப்பட வேண்டும். எளிதாக சுத்தம் செய்ய வசதியாக உள்ளதாகவும் இருக்க வேண்டும்.
9 அனுமதி பெற்ற கட்டிட இடம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு ஏதாவது இருப்பினும் , வில்லங்கம் ஏதாவது இருப்பினும் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல
10 மேற்கண்ட மனைபிரிவில் உள்ள அனைத்து மனையிடத்தின் சொந்தக்காரரும் தொகையை செலுத்திய பின்னரே அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளதால் அலுவலகத்திலிருந்து இவ்வசதிகளைச் செய்யும் வரை தொகை செலுத்தியதை வைத்து உரிமை கொண்டாடக்கூடாது
11 மனைப்பிரிவில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்தி இருப்பினும் அப்பகுதியின் வளர்ச்சியை கணக்கில் கொண்டும் பேரூராட்சியின் நிதி வசதிக்குட்பட்டும் மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் படிப்படியாக வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும் . அடிப்படை வசதிகள் குறித்து தனியாகவோ , கூட்டாகவோ பேரூராட்சிக்கு எவ்விதத்திலும் எந்த ஒரு நிர்பந்தமும் செய்தல் கூடாது
12 திடக்கழிவு மேலாண்மையினை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். (உரக்குழி அமைக்க வேண்டும்)
13 கட்டிடம் கட்டுமானம் மற்றும் இதர காலங்களில் செங்கல் மற்றும் இதர புகையூட்டும் பொருட்களினால் மற்றவர்களுக்கு இடையூறு செய்தல் கூடாது .
14 கட்டிடம் சாலையிலிருந்து 10 அடியும் , மற்ற பக்கங்களில் சுற்றிலும் 5 அடியும் இடைவெளிவிட்டு கட்டப்பட வேண்டும் . கட்டிடத்திற்கு சென்று வருவதற்கான பாதை வசதி அவசியம் இருக்க வேண்டும். அவ்வாறின்றி பாதைக்காக பிரச்சினை மற்றும் பாதைக்கான வழக்குகள் ஏதேனும் இருந்து அதை மறைத்து கட்டிட உரிமம் பெறப்பற்றிருந்தால் இவ்வுத்தரவு செல்லாது . கட்டிட உரிமம் ரத்து செய்யப்படும் .
14 மேலும் கட்டிட அனுமதி கோரிய இடத்தில் கட்டுமானப் பணிக்கான தண்ணீர் தொட்டியினை நன்கு மூடி வைத்தும் , கட்டுமான பணிகள் நடைபெறும் இடத்தில் தேங்காமலும் உரிமையாளர்கள் கண்டிப்பாக பராமரிக்கப்பட வேண்டும். இவ்வாறு தாங்கள் செய்வதனால் டெங்கு மற்றும் பலவிதமான நோய்கள் பரவுவதை தடுக்க இயலும் . விதிமுறைகளை மீறி நடந்து கொண்டால் இந்த கட்டிட உரிமம் எவ்வித அறிவிப்பும் இன்றி இரத்து செய்ய நேரிடும்

TRUE COPY

Scanned with CamScanner

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு, அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் ஒன்று நகல்

பெறுநர்,

திரு/திருமதி : நிர்வாக பொறியாளர் , தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் , திருநெல்வேலி

த/பெ,க/பெ : நிர்வாக பொறியாளர்,தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ,

செயல் அலுவலர்
அஞ்சுகிராமம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்
06/02/2020

நகல் : வரி வசூலர், அஞ்சுகிராமம் பேரூராட்சி
(கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரிவிதிப்பு செய்ய உரிய நடவடிக்கைக்காக.)

TRUE COPY
of document
OC-L
TASES

Scanned with CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate